THE EXAMINATION OF THE WITNESS
(Section 281 Code of Criminal Procedure)
IN THE JUDICIAL MAGISTRATE COURT, VALLIYOOR.

| | | | |
|---|---|---|---|
| Calender | : | CC.233/2019 | **PW.7** |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : | | |

STATEMENT OF WITNESS

| | | |
|---|---|---|
| Name | : டாக்டர். திரு. ஆனந்தராஜ் | |
| Father's Name | : திரு.கோபாலகிருஷ்ணன் | |
| Village | : சென்னை | |
| Taluk | : சென்னை | |
| Employment | : டாக்டர் | |
| Age | : 35 | Date: 02.06.2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 on today.

**(Accused absent and petition U/s.317 Cr.P.C is filed and allowed)**

<u>முதல் விசாரணை</u> :-

1. நான் தற்போது சென்னை அப்பல்லோ மருத்துவமனையில் பட்ட மேற்படிப்பு படித்து வருகிறேன். இதற்கு முன்பு கடந்த 30.10.2018 அன்று ராதாபுரம் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியில் இருந்தபோது

இரவு 07.45 மணிக்கு ராமசாமி த-பெ.சொக்கலிங்கம் என்பவர் விபத்தில் காயம் ஏற்பட்டு சிகிட்சைக்காக மூர்த்தி என்பவர் மூலம் அழைத்து வரப்பட்டார். ராமசாமி சுயநினைவுடன் இருந்தார். அவர் என்னிடம் அன்றைய தினம் அன்றைய தெற்கு வள்ளியூர் யூட்டனில் இருச்சக்கர வாகனத்தில் வந்தபோது நான்கு சக்கர வாகனம் இனோவா மோதி காயம் ஏற்பட்டதாக கூறினார்.

அவரை பரிசோதித்த போது, கீழ்கண்ட காயங்கள் இருந்தன.

**காயம் எண் 1** – வலது பக்க கால் பெருவிரலில் 0.5 x0.5 செமீ

அளவில் சிராய்ப்பு காயம் காணப்பட்டது.

**காயம் எண் 2 –** வலது கால் பெருவிரலில் 0.7 x 0.7 அளவில் சிராய்ப்பு காயம் இருந்தது.

**காயம் எண். 3.** வலது தோள்பட்டையிலும், வலது தொடையிலும் வலி இருப்பதாக கூறினார். அவருக்கு சிகிட்சை அளித்துவிட்டு மேல்சிகிட்சைக்காக கன்னியாகுமரி மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். ஆனால் அவர் அங்கு மேல் சிகிட்சை எடுத்துக் கொள்ளவில்லை. எனவே அவருக்கு ஏற்பட்ட காயம் குறித்து கருத்து சொல்ல இயலாது என சான்று வழங்கினேன்.

நான் வழங்கிய விபத்து பதிவேடு **(அ.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

3. நோயாளி என்னிடம் கூறியபோது யூட்டன் எடுத்தபோது விபத்து நடந்ததாக கூறியுள்ளார் என்றால் சரிதான். நோயாளிக்கு ஏற்பட்ட மூன்று காயமும் வலது பக்கம்தான் ஏற்பட்டது என்றால் சரிதான். யூட்டன் செய்யும்போது இவர் மீது நான்கு சக்கர வாகனம் நேரடியாக மோதியிருந்தால் காயம் பெரியதாக இருக்கும் என்றால் சரிதான்.

Taken down me in open court in the presence of the accused read over to the deponent and admitted by him/her to be correct.

MOSES JEBASINGH

Digitally signed by MOSES JEBASINGH
Date: 2026.06.02 15:08:32 +0530

Judicial Magistrate,

Valliyoor.